# விவிலியத்தில் விருந்து

51

**முனைவர் ஜா. சாந்தி பாய்**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி**

**ஆய்வுச்சுருக்கம்:**
மக்களின் பண்பாடுகளை வெளிப்படுத்துகின்ற ஒரு கூறே விருந்தோம்பல் ஆகும். தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் தனியிடம் பெற்றுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. உலக அளவில் மனிதர் வாழ்வியலை ஆராய்ந்து நோக்குங்கால் விருந்தோம்பும் பண்பு மாட்சியுடன் விளங்கி வந்திருக்கிறதை அறியலாம். கிறித்தவ சமய நூலாகிய விவிலியம் இஸ்ரவேலர் என்ற இனக்குழுவின் தொடக்கத்தையும் , அது வளர்ந்து தனி நாடாக உருபெற்ற விதத்தையும் விதந்தோதுகிறது. இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட அவ்வின மக்கள் உலக மக்களுக்கே ஆசீர்வாதமாக இருக்கிறார்கள். இருக்க வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம் என்பதாக கூறும் விவிலியம் 66 புத்தகங்களைத் தன்னுள்ளடக்கியது ஆகும். இதனுள் சொல்லப்படாத பொருளில்லை. மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து அறக்கருத்துக்களையும் உள்ளடக்கிய இந்நூல் விருந்தோம்பும் பண்பையும் விதந்தோதுகிறது. பழங்காலந் தொட்டே முகமறியா அந்நியர்களை உபசரிக்கும் பண்பு வளர்ந்துள்ளது. சமாதானத்தை விளைவிக்கும் ஆற்றல் மிக்க கருவி விருந்தோம்பல் எனலாம். ஆட்சியமைப்பில் , தொழுகையில், விழாக்களில் என பல நிலைகளில் விருந்தோம்பல் இடம் பெறுகின்றது. மொத்தத்தில் மக்களின் வாழ்வியலில் விருந்தோம்பல் இன்றியமையா இடத்தைப் பெறுகிறது எனலாம். விவிலியத்தின் வழி விருந்தோம்பும் பண்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: விரும்தோம்பல், விவிலியம், பகைஞர், விருந்து, விருந்தினர்

**முன்னுரை**

மனித வாழ்க்கையில் காலம் காலமாக கடந்து வரும் பண்பாடுகளில் ஒன்றே விருந்தோம்பல். இப்பண்பாடு உலக அளவில் எல்லா மனிதர்களின் மத்தியிலும் பாதுகாக்கப்பட்டு வாழ்வியலுள் இன்றியமையா இடத்தைப் பிடித்துள்ளது. 'விருந்தும் மருந்தும் மூன்றுநாள் ,' 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை ' போன்ற சொலவடைகள் மக்கள் மத்தியில் பேசப்படுவதைக் காணலாம். உலக இலக்கியங்களும் விருந்தோம்பல் பண்பினைப் பதிவு செய்துள்ளன. உலக இலக்கியங்களுள் ஒன்றான விவிலியமும் இஸ்ரவேல் மக்களின் பண்பாடுகள், பழக்கவழக்கங்களைப் பதிவு செய்துள்ளது. கிறித்தவர்களின் திருமறையாக இலக்கிய செறிவினை உள்ளடக்கி மனிதனின் மீட்பை குறித்த செய்தியை நற்செய்தியாக அறிவிப்பதே விவிலியம். 'அன்பு' ஒன்றையே மையப் பொருளாகக் கொண்டு , இறைன் மீது அன்பு , மனிதன் மீது அன்பு என்று இரண்டு நிலைகளில் அன்பு இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. அன்பை பறை சாற்றும் விவிலியமும் விருந்தோம்பல் பணபைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

**விருந்து:**

விருந்து என்றாலே அகமும் , முகமும் மலரும். விருந்தினர்களை எதிர்கொண்டு , அவர்கள் உண்பதை கரிசனையோடு கவனித்து , உபசரித்து உவகை கொள்வது தமிழர் பண்பாடு. 'விருந்து என்றால் புதுமை என்பது பொருள். இதனை , தொல்காப்பியர் 'விருந்து தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே ' (பொருளாதிகாரம் 237) என்கிறார். தமிழ் இலக்கியங்கள் இல்லறத்தின் மேன்மையே விருந்தோம்பலில் தான் உள்ளது என்கிறது. அறநூல்கள் இல்லறத்தோர் கடமைகளில் சிறந்த கடமையாக இல்லத்தின் தலைவி விருந்தினர்களுக்கு விருந்தோமபுவதைக் குறப்பிடுகின்றன. உபசரித்து வேண்டுவன அளித்து இன்புற செய்தல் வேண்டும். இதனை தொல்காப்பியம்

'விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும்
அன்ன கிழவோள் மண்புகள்' (கற்பியல் 11)

என்று சுட்டுகிறது. வள்ளவரும் இல்லறவாழ்வின் உயிர்த் துடிப்பாக விளங்குவது விருந்தோம்பல் என்கிறார்.

' இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு ' (குறள் - 81)

விருந்தினர் என்றால் உறவும் , சுற்றமும் என்ற சிந்தனையே இன்றைய வாழ்வியலில் இடம் பெறுகின்றது.

'விருந்தினர் என்றால் புதியவர்களைக் குறிப்பதாகும். முன்பின் அறிமுகம் இல்லாத புதியவர்களை வரவேற்று உபசரிப்பதே மிக சிறந்த விருந்தோம்பல் ஆகும். இதனை விவிலியம்.

'அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள். அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு ' (எபிரெயர் 13:2) என்கிறது. 'அந்நியரை உபசரித்தல் பெண்களின் கடமையாகவும் கூறப்பட்டுள்ளது. ( 1 தீமோத்தேயு 5:20)

**விருந்தோம்பும் முறை:**

விருந்தோம்பும் முறை குறித்து சங்க இலக்கியங்களும் அற இலக்கியங்களும் பல கருத்துக்களை எடுத்தியம்புகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதி தம்மை நாடி வரும் விருந்தினரை மென்மையான சொல்லைக் கூறியும் , உள்ளம் கலந்து உறவாடியும் , தங்குவதற்கு வசதியான இடமளித்தும், ஆடை அணிகலன்கள் அளித்தும் உபசரிக்க வேண்டும் என குறிப்பிடுகின்றது.

'இன்சொல் அளாவல், இடம் இனிது ஊண் யாவர்க்கும்
வன்சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முருந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினால் நாளும்
விருந்து ஏற்போர் விண்ணோர் விரைந்து' (ஏலாதி 7)

விவேக சிந்தாமணி என்னும் அறநூல் விருந்தினரை உபசரிக்கும் ஒன்பது முறைகளைக் குறிப்பிடுகின்றது. அவையாவன 1. விருந்தினரை மெச்சுதல் 2. இனிமையான மொழி பேசுதல். 3. முகமலர்ச்சி கொண்டு நோக்குதல் 4. வருக என வரவேற்றல் 5. மரியாதை நிமித்தம் எழுந்து நிற்றல் 6. மகிழும்படியான செய்திகளைக் கூறுதல் 7. அருகில் அமர்தல் 8. விடைபெறும் போது பின்செல்லுதல் 9. நேசத்துடன் நல் முகமன் வழங்கல் என்பவையாகும். இப்பாடல் விவேக சிந்தாமணியில் 55 வது பாடலாகும்.

விருந்தினர் விடைபெறும் போது அவர்கள் பின்னே ஏழடி நடந்து சென்று வழியனுப்புவது பண்டைய மரபு , இதனை பொருநராற்றுப் படை 'காலின் ஏழு அடிப்பின்சென்று' என குறிப்பிடுவதைக் காணலாம்.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'

என்ற 90வது குறள் விருந்தோம்பலில் இடம் பெற வேண்டிய இன்முகம் குறித்து எடுத்தியம்புகிறது.

'அல்லல் ஆயினும் விருந்துவரின் உவக்கும் முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமக்கள்'

என நற்றிணை 142ஆவது பாடல் இரவு நேரமாயினும் விருந்து வந்தால் தலைவி மகிழ்வாள் என பதிவிட்டுள்ளது.

**விவிலியமும் விருந்தோம்பும் முறையும்:**

விவிலியத்தில் அந்நியரை உபசரித்தல் , பிறந்தநாள் விருந்து , திருமணவிருந்து, ராஜவிருந்து, மயிர்க்கத்தரித்தல் விருந்து , சத்துருவுக்கும் விருந்து , வஞ்சனையை வெளிப்படுத்துவதற்காக செய்யப்பட்ட விருந்து, ஜெயவிருந்து, பலி விருந்து , இராவிருந்து என பல்வேறுப்பட்ட நிலைகளில் விருந்து இடம் பெறுகின்றது.

விருந்தின் நோக்கம்:

அந்நியர்களுக்கு உணவளித்தல் , தன் மேன்மையை எடுத்துரைத்தல் , தன் வாழ்வின் சிறப்பான நாளைகக் கொண்டாடுதல், போன்றவை பொதுவான நோக்கங்களாகும். இவைபோக , தனிப்பட்ட விதத்தில் பல்வேறு நோக்கங்களுக்காக விருந்தோம்பல் நடைபெறுகின்றது.

**அந்நியரை உபசரித்தல்:**

விவிலியத்தில் விசுவாசத்தின் தந்தை என்றழைக்கப்படும் ஆபிரகாமும் , அவர் இனத்தான் லோத்தும் முகமறியாத அந்நியரை உபசரித்து நன்மை பெற்றுக் கொள்வதைக் காணமுடிகிறது. ஆபிரகாம் தன்வீட்டின் வழியே பிரயாணம் சென்ற மூன்று நபர்களைக் கண்டு 'அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து' என்று விருந்தினரைக் கண்டவுடன் அவர்களை வரவேற்ற விதத்தை ஆதியாகமம் 18ஆம் அதிகாரம் இரண்டாம் வசனம் எடுத்துரைக்கிறது. மட்டுமல்லாது , கால்களைக் கழுவிக் கொள்ள தண்ணீர் கொடுப்பதையும் அவர்களோடு இதமாக பேசி ஆகாரம் புசித்து பின்செல்லலாம் என வருந்தி அழைப்பதையும் காணலாம். அவர்கள் புசிப்பதற்கு மூன்றுபடி மெல்லிய மாவில் சாராள் அப்பம் சுடுவதையும், மாட்டுமந்தையிலிருந்து இளங்கன்றினைப் பிடித்து வேலைக்காரன் சமையல் செய்வதையும் விவரித்துக் காட்டுகிறது. சமைத்தபின் ஆபிரகாம் வெண்ணை , பால் சமைத்த கன்று , அப்பம் யாவையும் எடுத்து வந்து விருந்தினர் முன்பு வைத்து அவர்கள் அருகே நின்று கொண்டிருப்பதை ஆதியாகமம் 18ஆம் அதிகாரம் பதிவு செய்துள்ளது. விருந்து புசித்த அவர்கள் பிள்ளையற்ற ஆபிரகாமுக்குப் பிள்ளையை வாக்குப் பண்ணுகிறார்கள். அவர் விடைபெற்று செல்லும் போது ஆபிரகாமும் அவர்களோடே கூடப் போய் வழி விட்டனுப்பினான். (ஆதி 18:16). இதைப் போல இவனது சகோதரன் மகன் லோத்து சோதோம் என்ற பட்டணத்தில் வாழ்ந்து வந்தான். அந்தப் பட்டணமோ பொல்லாவர்கள் வாழ்ந்த பட்டணம். அந்தப் பட்டணத்தின் வாசலில் அமர்ந்திருந்த லோத்து இரண்டு பேர் தன் பட்டணத்தில் வருவதைக் கண்டு , எழுந்து, எதிர்கொண்டு, தரைமட்டும் குனிந்து 'ஆண்டவன்மார்களே அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி , உங்கள் கால்களைக் கழுவி இராத் தங்கி , காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம். ' என்றான். அவர்களை மிகவும் வருந்தி அழைத்து தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு விருந்து பண்ணினான். சோதோம் பட்டணத்தார் அவ்விருவர் மேலும் பொல்லாப்பு செய்ய துணிந்த போது தம் இரு பெண்மக்களை அவர்களிடம் விட்டு விடத் துணிகிறான். இவ்விதமாய் தன் கூடாரத்தில் அடைக்கலமாக வந்த விருந்தினர்களைப் பாதுகாக்க தம் பிள்ளைகளையும் இழக்க சம்மதிக்கும் விருந்தோம்பல் முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.

முக மறியாத அந்நியர்கள் ஆனாலும் அவர்களுக்குத் தேவையான உணவும் , உறையுளும் வழங்கும் தன்மையோடு வந்தவர்களோடு இன்முகம் காட்டி பேசி , அவர்கள் கால்களைக் கழுவ தண்ணீர் கொடுத்து உபசரிக்கும் பண்பு நம் தமிழ் இலக்கிய பண்புகளோடு ஒத்து செல்வதை காண்பது நலம்.

பிறந்த நாள் விருந்து :

தன் மகனாகிய ஈசாக்கு பிறந்த போது ஆபிரகாமுக்கு வயது 100. தன் ஒரே மகன் பால் மறந்த நாளில் ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினான் என்று விவிலியம் கூறுகிறது. எகிப்து தேசத்தை ஆளுகை செய்த பார்வோன் (அரசன்) தன் பிறந்த நாளுக்குத் தன் கீழ்பணியாற்றும் பணியாளர் யாவருக்கும் விருந்து பண்ணினதோடு சிறைச்சாலையிலிருக்கும் சிலரை விடுதலையாக்குகிறார். (ஆதி 40: 20,21). இன்றைக்கும் நம் மக்களாட்சியில் இவ்வாறு தலைவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கைதிகள் விடுதலையாக்கப்படுவதைக் காண்கிறோம்.

ஏரோது ராஜா தன்னுடைய பிற்நதநாளைக் கொண்டாடும் போது தன் பிரபுக்கள் , சேனாபதிகள், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் விருந்து பண்ணினார். இவ்விருந்தில் நடனக்களிப்பு இடம்பெறுவதைக் காணமுடிகிறது. அவ்வாறு நடனமாடிய பெண்ணுக்கு நீ எதைக் கேட்டாலும் தருவேன் என வாக்குறுதி அளித்து கேட்டதைக் கொடுப்பதையும் மாற்கு தன் நற்செய்தி நூலில் ( 6:22-28) பதிவு செய்துள்ளார்.

அரசாட்சியில் உள்ளவர்கள் தம் பிறந்த நாளைக் கொண்டாடும் போது விருந்து செய்வதை மேன்மையாகக் கருதினர். அவ்விழா மகிழ்வில் வாக்குறுதிகளை அள்ளிக் கொடுப்பதையும் , சிக்கலில் சிக்கிக் கொள்வதையும் இன்றும் காணலாம்.

**திருமண விருந்து:**

திருமண நிகழ்வில் இடம் பெறும் விருந்து நிகழ்வு விவிலியத்தில் இடம் பெற்றுள்ளது. லாபான் என்பவன் தன் மகளை யாக்கோபு என்பவனுக்கு மணமுடித்து கொடுக்கும்போது அவ்விடத்து மனிதர் எல்லாரையும் அழைத்து விருந்து பண்ணினான். (ஆதி 29:22)

திருமணம் செய்து கொள்ளும் வாலிபர் விருந்து செய்வது பழைய ஏற்பாட்டின் வழக்கமாக இருந்துள்ளது. சிம்சோன் தான் விரும்பி மணம்புரிய வந்த பெண்ணின் வீட்டில் வந்து அங்கு ஏழுநாள் விருந்து வைப்பதைப் பார்க்கிறோம். (நியாய 14:10-12) விருந்தில் விடுகதையும் இடம் பெறுகின்றது. இயேசு கிறிஸ்துவும் தம் போதனையில் விருந்து பற்றிய உவமைக் கதையினை எடுத்துரைக்கிறார். அக்கதையில் திருமண விருந்துக்கு வருந்தி அழைக்கும் போக்கைக் காணமுடிகிறது. அழைத்தவர்கள் வரவில்லையென்பதால் மறுபடியும் தன் பணியாளரை அனுப்பி விருந்து ஆயத்தங்களைக் (எருது , கொழுத்த ஜெந்து) கூறி விருந்தினர்களை அழைப்பதைக் காண முடிகிறது. திருமண விருந்துக்கான முறையான முதல் அழைப்புக் கொடுக்கப்பட்டாலும்இ விருந்திற்கான தயாரிப்பு முடிந்தபின் பணியாளர்களைக் கொண்டு இரண்டாவது அழைப்புக் கொடுப்பதும்இ அதன்பின் விருந்தினர் வருவதும் யூதர்களின் பழக்கமாகும். இக்கதையில் அழைப்பு இன்றியமையாததாகிறது.

**ராஜ விருந்து :**

மக்களை ஆளுகின்ற தலைவர்கள் தங்கள் பிறந்த நாளை மாத்திரம் அல்ல பல்வேறுபட்ட காரணங்களுக்காகவும் விருந்தளிப்பதைக் காணலாம். 127 நாடுகளை ஒரு சேர தன் குடையின் கீழ் ஆளுகை செய்தவர் அகாஸ்வேரு ராஜா. இவர் தன்னுடைய அரசின் சிறந்த செல்வத்தையும் , தன் பிரதாபத்தையும் 180 நாள் வரையும் காட்டியதோடு தன் அரமனையிலுள்ள அனைவருக்கும் தன் சிங்காரத் தோட்டத்தில் ஏழு நாள் விருந்து கொடுப்பதை எஸ்தர் புத்தகம் பதிவிட்டுள்ளது. ராஜ தகுதிக்கு ஏற்ப பொன்னால் செய்யப்பட்ட பாத்திரங்களில் முதல் தரமான திராட்சரசம் பரிமாறப்பட்டது. அவரவர் விருப்பத்திற்கேற்ப எவ்வளவு தேவையோ அதற்கேற்ப பானம் பண்ணினார்கள். அந்நாட்டின் வழக்கத்தின் படி மிக விமரிசையாக அந்த விருந்து பரிமாறப்பட்டது. விருந்து என்றாலே திராட்சரசம் தான். அகாஸ்வேருவின் மனைவியாகிய வஸ்தியும் பெண்களுக்கென தனியாக விருந்து செய்ததைப் பார்க்கலாம். ராஜாவின் செல்வ செழிப்பையும் , புகழையும் பிரசித்தப்படுத்துவதற்காகவே இந்த விருந்து கொண்டாட்டம் நிகழ்த்தப்படுவதைக் காணலாம்.

பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சரின் மகன் பெல்ஷாத்சார் என்னும் ராஜா தன் பிரபுக்களில் 1000 பேருக்கு மட்டும் பெரிய விருந்து செய்தார் என்பது பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்விருந்தில் தன் தகப்பன் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டு வந்த பொன் , வெள்ளி பாத்திரங்களைக் கொண்டு வந்து குடிப்பதற்குப் பயன்படுத்திய செய்தியும் இடம் பெறுகின்றது. அரசர்கள் தாங்கள் கொள்ளையிட்ட பொருட்களை விருந்துகளில் பயன்படுத்தினார்கள் என்பதை அறிய முடிகிறது.

விருந்தில் பரிமாறப்படும் திராட்சரசம் மனதைக் களிப்பாக்குவதால் விரும்பப்படாத நிகழ்வுகள் அரங்கேறுவதைக் காணலாம். இப்பதிவுகள் தானியல் புத்தகத்தின் 5வது அதிகாரத்தில் இடம் பெறுகிறது.

மயிர்க்கத்தரித்தல்:

யூதர்களின் வாழ்வில் ஆடுகளுக்கு மயிர்கத்தரித்தல் என்பது சிறப்பான நிகழ்வு. தாங்கள் வளர்க்கும் ஆடுகளின் மயிர்களைக் கத்தரித்து கம்பளியாக மக்கள் பயன்படுத்துகின்றனர். இது அவர்களுக்கு வருமானத்தைத் தரும் ஒன்றாகும். அதிகமாக ஆடுகளை வளர்ப்பவர்கள் மனமகிழ்ச்சியுடன் ஆட்டின் மயிர்கத்திரிப்பின் நேரத்தை விருந்து உண்டு மகிழ்கின்ற நாளாகக் கொண்டாடுகின்றனர். அதற்காக அவர்கள் தம்முடன் பணிபுரிந்த ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் விருந்து செய்து உபசரித்து மகிழ்வதை விவிலியத்தில் காணலாம். 1 சாமு 25ஆம் அதிகாரம் மற்றும் 2 சாமுவேல் 23ஆம் அதிகாரங்களில்

இடம்பெறுகின்றது.. இவ்விருந்து ராஜ விருந்துக்கு சமமாக கருதப்படுகிறது. தங்கள் பகைகளைக் காட்டவும் ஜனங்களை அழிக்கவும் சில நேரங்களில் இவ்விருந்து பயன்படுகிறது.

சத்துருவுக்கும் விருந்து

பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே என பாரதியார் வேண்டுவதைக் காணலாம். பகைவருக்கு அருளுகின்ற தன்மை மனித இயல்புகளுக்கு அப்பாற்பட்டது. இறையடிவர்களுக்கு வாய்க்கின்ற தன்மையது. இத்தன்மையை விவி pலியத்தின் இராஜாக்கள் புத்தகத்தில் காணமுடிகிறது. சீர் pயர் இஸ்ரவேலர் மீத படையெடுக்கத் திட்டமிடும் போதெல்லாம் ஞான திருஷ்டிகாரனாகிய எலிசா இஸ்ரவேல் அரசனிடம் ஆள் அனுப்பி இந்த இடத்திற்குப் போகாதபடி எச்சரிக்கையாயிரு. சீரியர் அங்கு பாளயமிறங்குவார்கள் என்று எச்சரிப்பது வழக்கம். அரசனும் அவ்விடங்களுக்கு ஆளனுப்பி அப்படியே நிகழக்கண்டு எச்சரிக்கையாக இருந்தான். சீரிய அரசனுக்கு வியப்பாக இருந்தது. தன்னுடைய நாட்டிலிருந்து தான் யாரோ அவர்களுக்கு உளவு சொல்லுகிறார்கள் என்று எண்ணினான். ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டிய போது எலிசா தீர்க்கதரிசியைக் குறித்து அறிந்து அவனைப் பிடிக்க படையை அனுப்புகிறான். எலிசா இருந்த பட்டணம் படையால் சூழப்பட்டது. இதை அறிந்த எலிசா இறைவனை வேண்ட படையினருக்குக் கண்மயக்கம் ஏற்பட்டது. அவர்களை எலிசா அழைத்துக் கொண்டு சீரிய அரசனிடம் கொண்டு விட்டான். பகைவரின் படையைக் கண்ட அரசன் அவர்களைக் கொன்று விடலாமா என்று கேட்க எலிசா , 'இவர்கள் புசித்துக் குடித்து தங்கள் ஆண்டவனிடத்துக்குப் போகும்படிக்கு , அப்பமும் தண்ணீரும் அவர்களுக்கெதிரில் வையும் ' என்றார். அரசனும் உடனே அவர்களுக்குப் பெரிய விருந்து பண்ணி அவர்களை அனுப்பி விட்டான். அதன்பிறகு சீரியர் இஸ்ரவேல் மீது பகைமை பாராட்டவில்லை ( 2 இராஜாக்கள் 6:8-23) சத்துருவுக்கும் அன்பு பாராட்டும் விருந்து உபசரணைப் போரினை முறித்துப் போடுகிறது

வஞ்சனையை வெளிப்படுத்த விருந்து:

விருந்து என்பதே நம்மை நாடி வந்தவர்களின் அகமும் புறமும் மகிழசெய்வது ஆகும். அந்த விருந்தையே வஞ்சகர்களை அடையாளப்படுத்தவும் பயன்படுத்தியதை எஸ்தர் புத்தகம் பதிவு செய்துள்ளது. ஆமான் என்னும் பிரபுக்களின் தலைவன். தன்னை வணங்காத யூதனாகிய மொர்தெகாய் என்பவனை அழிப்பதற்கு எண்ணினான். அவனை மட்டும் அழிப்பது அற்பமாகத் தோன்றியதால் அவன் குலத்தையே அழித்து விடும் நோக்கம் கொண்டான். அரசனிடம் பேசி அவன் ஆளுகின்ற 127 நாடுகளிலும் வாழும் யூதர்களை அழிக்க கட்டளை அனுப்பினான். அந்தந்த நாட்டில் வழங்கும் எழுத்து முறையிலும் , அந்தந்த ஜாதியார் பேசும் மொழியிலும் அக்கட்டளை எழுதி அனுப்பப்பட்டது. இச்சூழலில் அரசியாக இருந்த யூத பெண் எஸ்தர் தன் இனத்துக்காக அவர்களைப் பாதுகாக்க அரசனிடம் விண்ணப்பம் செய்ய விழைகிறாள். ஆனால் அந்நாட்டின் முறைப்படி அரசன் பொற்செங்கோலை நீட்டினால் ஒழிய ராணியும் அரசனிடம் பேச முடியாது. ஆமானை நேரடியாக குறை கூறவும் முடியாது. அதனால் எஸ்தர் அகாஸ்வேரு அரசனையும் பிரபுக்களின் தலைவனாகிய ஆமானையும் இரண்டு நாள் விருந்துக்கு அழைக்கிறாள். இரண்டாம் நாள் விருந்தில் அகமகிழ்ந்த அரசன் உன் விருப்பம் என்ன என கேட்க தன் விருப்பத்தினை வெளிப்படுத்துகிறாள். 'ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும் என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக ' என கேட்கிறாள். தங்கள் நிலையை அதாவது, தாங்கள் கொலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறோம் என கூறுகிறாள். இதற்கு காரணமானவன் யார் என கேட்கும் போது தன் முன் இருக்கிற 'இந்த துஷ்ட ஆமான் தான் ' என ஆமானை அவன் முன் வைத்தே அரசனிடம் காட்டிக் கொடுப்பதைக் காணலாம். ஆமானும் தண்டிக்கப்படுகிறான். இவ்வாறாக , விருந்து வஞ்சகம் செய்தவனைக் காட்டிக் கொடுக்கவும் பயன்படுத்தப் பெறுகிறது.

எஸ்தர் புத்தகம் யூதர்கள் வெற்றிக் கொண்டாட்டமாக விருந்து கொண்டுவதை (ஜெய விருந்து) பதிவிட்டுள்ளது. அரசர்களும் தங்கள் போரில் வெற்றி பெற்றபின் விருந்தயர்வதை விவிலியத்தின் பல பகுதிகளிலும் காணலாம். இதைப்போல இறைவனுக்குப் பலியிடும் போது லேவியர்களும் , மக்களின் தலைவர்களும், விருந்தயர்வதைக் காணலாம். இராவிருந்தென்பது விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றது.

**முடிவுரை:**

மக்கள் தம் வாழ்வில் 'விருந்து அயர்தல் ' என்னும் பண்பாட்டினை விடாமல் பின்பற்றி வருகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தன் முன்னோரின் வழக்கத்தின் படி விருந்து கொண்டாடுகிறான். உலகின் அனைத்து மக்களுக்கும் இந்த பண்பாடு பழங்காலந்தொட்டே இருந்து வந்திருக்கிறது. விவிலியமும் பழங்கால இனக்குழு மக்கள் வாழ்வின் விருந்தோம்பும் மாண்பு தொடங்கி , பிற்காலம் வரையிலும் நாகரிகம் வளர வளர விருந்தோம்பும் முறையிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் பதிவிட்டுள்ளது. விருந்தைக் கொண்டு பகையை மாற்றுவதும் , தனி மனிதனின் இனத்தின் மீதான வஞ்சனையை வெளிப்படுத்துவதும் , பொருளாதார அடிப்படையில் ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கும் போது விருந்து கொண்டாடுவதும் நாம் ஆய்ந்து நோக்க வேண்டிய விருந்து முறைகளாகும்.

**துணைநூற்பட்டியல்**

1. பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகம சங்கம், பெங்களூர், 2015
2. சுப்பிரமணியபாரதி, பாரதியார் கவிதைகள், பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம், 2017
3. சோமசுந்தரனார். பொ. வெ.(உ.ஆ) , பத்துப்பாட்டு - மூலமும் உரையும் , திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1980.
4. பாலசுப்ரமணியன். கு. வெ.(உ.ஆ) , நற்றிணை, நியூசெஞ்சரி புக் ஹவுஸ் , மதுரை, முதல்பதிப்பு, ஏப்ரல், 2004
5. திருவள்ளுவர், திருக்குறள், கொற்றவை பதிப்பகம், 2009